அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண் :159/2016
தேதி. : 18/10/2016

# இரங்கல் செய்தி

## மருத்துவமனை தீ விபத்து 22 பேர் பலியான சம்பவம்
## சமக நிறுவனர் - தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்

ஒடிசா மாநிலம் புவனேஷ்வரில் உள்ள தனியார் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவில் நேற்று இரவு ஏற்பட்ட தீவிபத்தில் 22 நோயாளிகள் உடல் கருகி பலியான சம்பவம் மிகவும் வேதனைக்குரியது. மேலும் பல நோயாளிகள் படுகாயமடைந்துள்ளனர். பலியான நோயாளிகளின் குடும்பத்தாருக்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் படுகாயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**ஆர்.சரத்குமார்** B.Sc.
நிறுவனத் தலைவர்